


சைதை மேற்கு பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு விளக்க மாபெரும் பொதுக்கூட்டம், சைதாப்பேட்டை தேரடி திடலில் புதன்கிழமையன்று மாலை பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., தலைமையிலும், துணை மேயர் மு. மகேஷ்குமார், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன் வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன சிறப்புரையாற்றினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்தரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## இராமேசுவரம் - இராமநாத சுவாமி திருக்கோயிலின்

# 6 பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார் !

**சென்னை, ஜுலை 5-**

**திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.10.57 கோடி செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி திறந்து வைத்து, இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலின் 6 பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாக பதவி உயர்வு ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 10.57 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயிலின் 6 திருக்கோயில் பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு வழங்கி, அதற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், பக்தர்கள் அதிகளவில் வருகைதரும் திருக்கோயில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவினை ஏற்படுத்தி, பக்தர்களின் அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடாக திகழும் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதியின் மூலம் பெருந்திட்ட வரைவின்கீழ், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரிசை முறை, காத்திருப்பு அறை, மருத்துவ மையம், முடிக் காணிக்கை செலுத்தும் இடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, அன்னதானக்கூடம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், சுகாதார வளாகம், திருமண மண்டபங்கள், பணியாளர் குடியிருப்பு ஆகிய திருப்பணிகளின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் 28.09.2022 அன்று தொடங்கி வைத்தார்.

அத்திருப்பணிகளில் 33.25 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட முடி காணிக்கை மண்டபம், வரிசை வளாகம், சுகாதார வளாகங்கள், கலையரங்கம், நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம், ஆகியவை கடந்த 14.10.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 10 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய தங்கும் விடுதியினை பக்தர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கடந்த 4 ஆண்டுகளில் 11,712 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்ட 7,006 கோடி ரூபாய் மதிப்பிலான 26,695 பணிகளில் இதுவரை 3,526 கோடி ரூபாய் மதிப்பிலான 13,541 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலில் கைங்கர்யம் பணியிடத்தில் பணிபுரிந்து வந்த 6 திருக்கோயில் பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு வழங்கி, அதற்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருச்செந்தூரிலிருந்து இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், கூடுதல் ஆணையர் பொ.ஜெயராமன், திருக்கோயில் தக்கார் ஆர். அருள்முருகன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கடலூர் துறைமுகத்தை இயக்கிட - மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் நிறுவனம்-

# தமிழ்நாடு கடல்சார் வாரியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பம்!

**சென்னை, ஜுலை 5-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கடலூர் துறைமுகத்தை இயக்குவதற்காக மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

கடலூர் துறைமுகத்தை தனியார் பங்களிப்புடன், துறைமுக இயக்கு நிறுவனத்தை தேர்ந்தெடுத்து இயக்குவதற்கு தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால், இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்பட்டது. இந்த ஒப்பந்தப் புள்ளியில் தகுதிபடைத்த துறைமுக இயக்கு நிறுவனமாக மஹதி இன்ஃப்ரா சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (Mahathi Infra Services Private Limited) நிறுவனத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிறுவனத்தின் சிறப்புப் பயன்பாட்டு நிறுவனமான Special Purpose Vehicle (SPV) நிறுவனத்தின் திருவாளர்கள் மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிமிடெட் (Mahathi Cuddalore Port and Maritime Private Limited) நிறுவனத்துடன் ஒப்பந்தம் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு கடல்சார் வாரியம் மற்றும் திருவாளர்கள் மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிட் நிறுவனத்திற் கும் இடையே கையொப்பமிடப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் ந. வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன், மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரவி சங்கர், இயக்குநர் கல்யாண் சொரூப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஆ. இராசா எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

# சைதை மேற்கு - கிழக்குப் பகுதி பாக முகவர்கள் (BLA-2) ஆலோசனைக் கூட்டம்!

### எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் அறிவிப்பு!

சென்னை, ஜுலை 5-

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. பாக முகவர்கள் (BLA 2) கூட்டம் இன்று நடைபெற உள்ளது. பகுதி செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலையில் ஆலோசனை வழங்குபவர்கள் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இது குறித்து சைதை மேற்குப்பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி செயலாளரும், பதிமூன்றாவது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ் ஆகியோரின் கூட்டு அறிக்கை வருமாறு:

கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாநில இளைஞர் அணி செயலாளரும், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சைதை மேற்குப் பகுதி - கிழக்குப் பகுதி பாக முகவர்கள் (BLA 2) கூட்டம் சைதாப்பேட்டை அப்துல்ரசாக் தெருவில் உள்ள எஸ்.பி.எஸ். திருமண மண்டபத்தில் இன்று (05.07.2025 சனிக்கிழமை) மாலை 5 மணியளவில், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக்குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குப் பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு பாக முகவர்களுக்கான ஆலோசனைகளை கழக துணை பொதுச்செயலாளரும், சென்னை மண்டல தேர்தல் பொறுப்பாளருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா அவர்களும், மற்றும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

எனவே சைதை மேற்கு கிழக்கு பகுதிக்குட்பட்ட 14 வட்டங்களுக்குரிய 254 பாகங்களுக்குட்பட்ட பாக முகவர்கள் (BLA 2) மற்றும் தலைமைசெயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில கழக நிர்வாகி, பகுதி கழக நிர்வாகிகள், வட்டகழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள் ஆகியோர் இக்கூட்டத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



"ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை திட்டத்தின் கீழ் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஆலந்தூர் வடக்கு பகுதி, 160வது வட்டம், பாகம் எண் – 277, ஆசர்கானா தெருவில் வீடு வீடாகச் சென்று படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் APP மூலம் கழக உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சியை குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைத்தார். அருகில் ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் ப.குணாளன், வட்டச் செயலாளர் கே.பி. முரளிகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் பிருந்தா ஸ்ரீ மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சி 4. வார்டில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வீடு வீடாகச் சென்று உறுப்பினர்களை சேர்த்தார். உடன் ஒன்றிய செயலாளர் பி.சேகர், பேரூர் செயலாளர் என்.பாண்டியன், தகவல் தொழில் நுட்ப அணி எஸ். அண்ணாதுரை, பேரூராட்சி மன்ற உறுப்பினர். ஆர்.வெங்கடேசன் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.